கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட /இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு -

(2014 /2015) - 2019 டிசம்பர்

**TLS 3233 Tamil Novel & Short Story**

தமிழ் நாவலும் சிறுகதையும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியில் **எவையேனும் இரு வினாக்களையும்** இரண்டாம் பகுதியில் **எவையேனும் மூன்று வினாக்களையும்** தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து வினாக்களுக்கு** விடை தருக.

## பகுதி I

(01) (அ) தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்துக்குக் காரணமாக அமைந்த சமூக இலக்கியப் பின்னணி பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) நாவலுக்கும் சிறுகதைக்கும் இடையிலான ஒற்றுமை - வேற்றுமைகள் பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

(02) (அ) வ. வே. சு. ஐயரின் சிறுகதைகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) ஆரம்பகாலத் தமிழ் நாவல்களின் பண்புகளைப் 'பத்மாவதி சரித்திரம்' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(03) (ஆ) மங்களநாயகம் தம்பையாவின் 'நொறுங்குண்ட இருதயம்' என்ற நாவலில் இடம்பெறும் பெண் பாத்திரங்களின் இயல்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ஆ) தி. ஜானகிராமனின் சிறுகதைப் பண்புகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி II

(04) "ஆரம்பகாலத் தமிழ் நாவல்கள், காவியப் போக்கிலிருந்து முற்றிலும் விடுபட முடியாத சூழ்நிலையில் இருந்துள்ளன." இக்கூற்றிற்கான காரணங்களை விபரிக்குக. (20 புள்ளிகள்)

(05) மணிக்கொடி எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன் <u>**அல்லது**</u> கு. ப. ராஜகோபாலனின் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவத்தினை விபரிக்குக. (20 புள்ளிகள்)

(06) ஈழத்துத் தமிழ்ச் சாதிய நாவல்களின் போக்கினையும் அவற்றிற்கான பின்னணியினையும் ஆராய்க. (20 புள்ளிகள்)

(07) பெண்ணிய நோக்கில் அம்பையின் சிறுகதைகளைப் பரிசீலிக்குக. (20 புள்ளிகள்)

****************************